டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 24.07.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 031 - Madurai | Online Edition

# ஏரிகள், நீர் நிலைகளில் மீன் வளர்ப்புத் திட்டத்தை மேம்படுத்துவதன் மூலம் கடல்சார் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நடவடிக்கைகள்

புது தில்லி, ஜூலை 23

நாடு முழுவதிலும் உள்ள 500 நீர் நிலைகள், ஏரிகளை ஒருங்கிணைத்து மீன்கள், அலங்கார மீன்வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்படும் என்று மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த முன்முயற்சியின் மூலம் ஏரிகள், நீர் நிலைகளில் மீன்வளத்தை அதிகரிக்கும் மத்திய அரசின் நோக்கத்தை இது பிரதிபலிக்கிறது. இத்திட்டத்தின் மூலம் மீனவர் களின் வாழ்வாதாரம் மேம்படுவதுடன் மகளிர் சுய உதவிக் குழுக்கள், மீன்வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள், மீன் விவசாய உற்பத்தி அமைப்புகள் ஆகியவை மேம்படுத்தப்படும்.

நீர்நிலைகள், ஏரிகளின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் சமர்ப்பித்துள்ள விரிவான திட்ட அறிக்கையின்படி இதற்காக முதலீடு மேற்கொள்ளப்பட உள்ளது. மாநிலங்கள் / யூனியன் பிரதேச அரசு களுடன் ஆலோசனை நடத்தப்பட்டு அடையாளம் காணப்படும் நீர்நிலைகள், ஏரிகளில் உள்ள தண்ணீரின் அளவைப் பொருத்து மீன்வளர்ப்புத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதன்படி தமிழ்நாட்டில் 10 நீர்நிலைகள் இந்த ஒருங்கிணைந்த மீன்வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்காக அடை யாளம் காணப்பட்டுள்ளன.

நாட்டில் உள்ள மீனவர்களின் வருவாயை அதிகரிக்கும் வகையில் மீன் விவசாய உற்பத்தி அமைப்புகள், பெண்கள் தலைமையிலான குழுக்கள், மீன்வளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள், ஒருங்கிணைந்த ஏரிகள், நீர்நிலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மீன்கள், அலங் கார மீன் வகைகள் வளர்ப்புக்கு, மத்திய மீன்வளம், கால்நடை வளர்ப்பு, பால்வளத்துறை அமைச்சகத்தின் கீழ் மீன்வளத்துறை நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இதன்படி தமிழ்நாட்டில் 6 நீர்நிலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு மத்திய மீன்வளத் துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் எழுத்து மூலம் அளித்து உள்ள பதிலில் இதனைத் தெரிவித்துள்ளார்.

# இராஜபாளையத்தில் வேளாண்மை விஞ்ஞானிகள் மற்றும் உதவி இயக்குனர் ஆய்வு



விருதுநகர், ஜூலை 23

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டாரம், வேளாண்மை உதவி இயக்குனர் தனலட்சுமி கூறுகையில், இராஜபாளையம் வட்டாரத்தில் உள்ள சேத்தூர் மேட்டுப்பட்டி, முத்துச்சாமிபுரம், தேவதானம் மற்றும் சோழபுரம் பகுதிகளில் அருப்புக்கோட்டை வேளாண் அறிவியல் ஆராய்ச்சி நிலைய தலைவர் டாக்டர் ராமசுப்பிரமணியன் தலைமையிலான குழு உடன் தென்னை, மா, நெல், உளுந்து, நிலக்கடலை மற்றும் பருத்தி போன்ற பயிர்களில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் குறித்து ஆய்வு செய்தனர். இதில் தென்னையில் காண்டாமிருகம் வண்டு தாக்குதல், சிவப்பு கூண்வண்டு தாக்குதல், வெள்ளை ஈ தாக்குதல் அறிகுறிகள் தென்பட்ட தோப்புகளில் அவற்றை கட்டுப்படுத்தும் முறைகளை பற்றி செயல் விளக்கமும் அந்தந்த பகுதி விவசாயிகளிடம் எடுத்துக் கூறினார்கள்.

மேலும் உளுந்து பயிரில் களை மேலாண்மையும், மகசூல் அதிகரிக்க TNAU Pulse Wonder 30 மற்றும் 45 நாள் இடைவெளியில் இலைவழி தெளிப்பு பற்றியும் விளக்கப்பட்டது. இதில் வேளாண்மை துறை மூலம் பெறக்கூடிய மானிய திட்டங்கள் குறித்து துணை வேளாண்மை அலுவலர் விவசாயி களிடம் விரிவாக எடுத்துரைத்தார். இதற்கான ஏற்பாடுகளை வட்டார தொழில் நுட்ப மேலாளர் நாராயணன் சிறப்பாக செய்திருந்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# நெற்பயிரில் சூழலியல் பகுப்பாய்வு குறித்த பண்ணைப் பள்ளி

மதுரை, ஜூலை 23

மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டார வேளாண்மைத் துறை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) திட்டத்தில் 23.07.26 அன்று பேச்சிகுளம் கிராமத்தில் முன்னோடி விவசாயி தவிடன், வயலில் நெற்பயிரில் சூழலியல் பகுப்பாய்வு குறித்த பண்ணைப் பள்ளி முதல் வகுப்பு நடைபெற்றது.




இப்பண்ணைப் பள்ளியில் பசுந்தாள் உரப்பயிர் தக்கைப்பூண்டு விதைப்பு செய்து 40 நாள் பூக்கும் தருணத்தில் மடக்கி உழவு செய்து பின்பு நடவு வயல் தயாரித்தல், பருவம் மற்றும் இரகத்தேர்வு, விதை நேர்த்தி, நாற்றாங்கால் தயாரித்தல், நாற்றாங்காலில் நீர் மேலாண்மை மற்றும் நாற்றாங்கால் பராமரிப்பு குறித்த தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இப்பண்ணைப் பள்ளிக்கு தொழில்நுட்ப உரை வழங்குவதற்கு ஓய்வு பெற்ற வேளாண்மை அலுவலர் மகாராஜன், சில்ரன் சாரிடபிள் டிரஸ்ட் மாவட்ட ஒருங்கிணைப்பாளர், மீனாட்சிசுந்தரம், உதவி வேளாண்மை அலுவலர் பிரபு, அட்மா திட்டப் பணி யாளர்கள் வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் ராஜசேகர், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பாலமுருகன் மற்றும் ஸ்ரீஹரிணி ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த உரம் மேலாண்மை மற்றும் சமச்சீர் வகையில் உரம் நிர்வாகம் பயிற்சி



பெரம்பலூர், ஜுலை 23

பெரம்பலூர் மாவட்டத்தில், பெரம்பலூர் வட்டாரம் ஒருங்கிணைந்த வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில், மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் பாபுவின் அறிவுரையின் படி, ஆத்மா திட்டத்தின் மூலம் ஒருங்கிணைந்த உரம் மேலாண்மை மற்றும் சமச்சீர் உர நிர்வாகம் பயிற்சி நடைபெற்றது.

இந்த பயிற்சியில் பெரம்பலூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் தாகூர் மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குனர் நல்லதம்பி மற்றும் வேளாண்மை உதவி இயக்குனர் தர கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கலந்து கொண் டார்கள். சிறப்பு விருந்தினராக வேளாண்மை அறிவியல் ஆய்வு நிலைய விஞ்ஞானி டோமினிக் மனோஜ் கலந்து கொண்டார்.

வேளாண்மை அலுவலர் தனபால் மற்றும் பரத், ஆத்மா திட்டத்தின் மூலம் வட்டார தொழில்நுட்ப அலுவலர் அனுசியா, திவ்ய பிரபா, கவி நிலவு கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், ஒருங்கிணைந்த உர மேலாண்மை மற்றும் சமச்சீர் உரம் நிர்வாகம் பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

அனைத்து வகையான இயற்கை எரு உரங்கள், அனைத்து வகையான நுண்ணுயிர் உரங்கள், அனைத்து பயிர்களுக்கான நுண்ணூட்ட உரங்கள், இவற்றின் முக்கியத்துவம் மற்றும் பயன்படுத்தும் விதத்தை தெளிவாக எடுத்துரைத்தார். பசுந்தால் பயிர் சாகுபடி முறை, பசுந்தலைப் பயிர் சாகுபடி முறை, அசோலா, நீலபச்சை பாசியை பயன்படுத்தும் முறை தெளிவாக எடுத்துரைத்தார். மற்றும் மண் ஆய்வுப்படி பயிருக்கு தேவை யான உரங்களை அளவான முறையில், சமச்சீர் வகையில், அனைத்து வகையான இயற்கை உரம், அனைத்து வகையான

உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்ட உரம் பயன்படுத்தி, செயற்கை உரங்களை குறைத்து பயன்படுத்தும் முறைகளை எடுத்துரைத்தார். வேளாண்மை விஞ்ஞானி டோமினிக் மனோஜ், நெல் பயிர் கடலை பயிர், மக்காச்சோளப் பயிர், சாகுபடி முறை களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். இந்த பயிற்சியில் கலந்து கொண் வேளாண்மை அலுவலர் பரத் அனைவரையும் வரவேற்று பேசினார். ஆத்மா திட்ட தொழில்நுட்ப வல்லுநர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்து, நன்றி உரையாற்றினார்கள். இக்கூட்டத்தில் 40 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## சமச்சீர் உரபயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்த வேளாண் பல்கலைக்கழக மாணவிகள்



திண்டுக்கல், ஜூலை 23

ஈரோடு மாவட்டம், சென்னிமலை வட்டாரம் வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு திண்டுக்கல் மாவட்டம், காந்திகிராம வேளாண் பல்கலைக்கழக பட்டதாரி மாணவிகள் கிராம தங்கல் மூலம் விவசாயிகளிடம் சாகுபடி சார்ந்த புதிய முறைகளை விவசாயி களுக்கு மாணவிகளான லேகாஸ்ரீ, திரித்தா, ஆனந்தி, நீசா பார்ஜோ, கவி வர்ஷினி, நதியா ஆகியோர் எடுத்து கூறினர்.

தமிழ்நாடு அரசு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை விவசாய நிலத்தை காப்போம் இயக்கத்தின் மூலம் இயற்கை விவசாயம் மற்றும் சமச்சீர் உரப் பயன்பாடு குறித்த விவசாயிகள் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விவசாயிகளுக்கு இயற்கை விவசாயத்தின் நன்மைகள் மண் ஆரோக்கியம் மற்றும் நுண்ணூட்டம் மற்றும் வேளாண்மை சமச்சீர் உர பயன்பாடு பசுந்தால் உரம் இயற்கை உரங்கள் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் ஆரோக்கியமான உணவு பழக்கம் பயன்பாடு, சாகுபடி செலவு குறைப்பு நிலையான விவசாயம் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறி மண்வளத்தை பாதுகாப்போம் விவசாய நிலத்தை நிலை நிறுத்துவோம், உணவை பாதுகாப்போம் போன்ற கருத்துக்களை வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம் சென்னிமலை வட்டாரத்தின் மூலம் விவசாயிகளுக்கு மாணவிகள் எடுத்து கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

# காளான் வளர்ப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி

திருச்சி, ஜூலை 23

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக வருகின்ற 29.07.26 அன்று (புதன் கிழமை) காளான் வளர்ப்பு குறித்த ஒரு நாள் கட்டணப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

இப்பயிற்சியில் சிப்பி காளான் வளர்க்கும் முறைகள், நிர்வாகம், வணிக காளான் வளர்ப்பு, செயல்விளக்கம், காளான் வளர்ப்பில் அனுபவம் வாய்ந்த தொழில் முனைவோர்களின் சொற்பொழிவு, சந்தை தகவல், காளானில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் தயாரிப்பு முறைகள் போன்றவை எடுத்துரைக்கப்படும்.

பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர் பயிற்சி நாளன்று காலை 9 மணிக்கு வந்து பயிற்சி கட்டணம் ரூ.590/- நேரிடையாக செலுத்த வேண்டும். முன் பதிவு அவசியம். பயிற்சியானது காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும். தேநீர் மற்றும் மதிய உணவு வழங்கப்படும். பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும். எனவே ஆர்வமுள்ள விவசாயிகள் மற்றும் இளைஞர்கள் முன்பதிவு செய்து கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் விபரங்களுக்கு தொலைபேசி எண் : 0431-2962854,9944 398239, 8838126730 என்ற எண்களை அலுவலக நேரத்தில் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை) தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை சிறுகமணி வேளாண்மை அறிவியல் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி தெரிவித்தார்.



**Rithvik Pipe**

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# தென்னையில் குரும்பை உதிர்வுக்கு காரணம் போரான் குறைபாடா? உண்மை என்ன?

தென்னை மரத்தில் பூக்கள் நன்கு பூத்திருந்தாலும், சிறிய குரும்பைகள் வளராமல் உதிர்ந்து விடுவது விவசாயிகளை அதிகம் கவலைப்படுத்தும் பிரச்சினையாகும். பலர் இதற்கு 'போரான் சத்து குறைபாடு தான் காரணம்' என்று நினைக்கின்றனர். ஆனால் உண்மையில், குரும்பை உதிர்வுக்கு போரான் குறைபாடு ஒரு காரணமாக இருந்தாலும், அதுமட்டுமே காரணம் அல்ல. பல உயிரியல், சுற்றுச்சூழல் மற்றும் ஊட்டச்சத்து காரணிகள் ஒன்றிணைந்து இந்தப் பிரச்சினையை ஏற்படுத்துகின்றன.

## குரும்பை உதிர்வது இயற்கையானதா?

தென்னையில் மகரந்தச் சேர்க்கைக்குப் பிறகு உருவாகும் அனைத்து குரும்பைகளும் தேங்காயாக மாறுவதில்லை. இயற்கையாகவே 50-70% வரை குரும்பைகள் ஆரம்ப நிலையிலேயே உதிரலாம். இது மரத்தின் இயல்பான வளர்ச்சி செயல்முறையாகும். ஆனால் இதைவிட அதிகளவில் தொடர்ந்து குரும்பைகள் உதிர்ந்தால், அதன் காரணத்தை கண்டறிந்து சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## போரான் குறைபாடு எவ்வாறு பாதிக்கிறது?

போரான் என்பது மிகக்குறைந்த அளவில் தேவைப்படும் நுண்ணூட்டச் சத்தாக இருந்தாலும், அதன் பங்கு மிகவும் முக்கியமானது.

### போரான்

- பூக்களின் வளர்ச்சியை மேம்படுத்துகிறது.
- மகரந்தத்துகள்கள் முளைப்பதை ஊக்குவிக்கிறது.
- கருவுறுதலை சீராக்குகிறது.
- வளரும் குரும்பைகளின் செல்சுவர் உருவாக்கத்திற்கு உதவுகிறது.
- இளம்காய்களின் வளர்ச்சியை உறுதிப்படுத்துகிறது.

### போரான் குறைபாடு ஏற்பட்டால்

- பூக்கள் முழுமையாக வளராமல் போகலாம்.
- மகரந்தச் சேர்க்கை குறையலாம்.
- கருவுறுதல் பாதிக்கப்படலாம்.
- உருவான குரும்பைகள் வளராமல் உதிரலாம்.
- இலைகள் சுருங்கியோ, வளைந்தோ காணப்படலாம்.
- வளர்ச்சி முனை (growing point) பாதிக்கப்படலாம்.

எனவே, போரான் குறைபாடு குரும்பை உதிர்வை அதிகரிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்றாகும்.

**போரான் மட்டும் தானா காரணம்?**

இல்லை. கீழ்க்கண்ட பல காரணிகளும் குரும்பை உதிர்வை ஏற்படுத்துகின்றன.

**1. வறட்சி மற்றும் நீர்ப் பற்றாக்குறை**

தென்னைக்கு நீர் தொடர்ந்து கிடைக்காத போது, மரம் தன்னைக் காப்பாற்றும் நோக்கில் இளம்குரும்பைகளை உதிர்க்கிறது.

**2. அதிக வெப்பநிலை**

கோடைக்காலத்தில் அதிக வெப்பமும், குறைந்த காற்றின் ஈரப்பதமும் குரும்பை உதிர்வை அதிகரிக்கின்றன.

**3. சமநிலையற்ற உரமிடுதல்**

நைட்ரஜன், பொட்டாசியம் மற்றும் பிற நுண்ணூட்டங்கள் குறைந்தாலும் குரும்பை உதிர்வு ஏற்படும்.

**4. மகரந்தச் சேர்க்கை குறைபாடு**

மழை, அதிக காற்று அல்லது பூச்சிகளின் செயல்பாடு குறைவதால் மகரந்தச் சேர்க்கை கபாதிக்கப்படலாம்.

**5. பூச்சி மற்றும் நோய் தாக்குதல்**

ஈரியோபைட் சிலந்தி, கருந்தலைப்புழு, பூஞ்சை நோய்கள் போன்றவை இளம்குரும்பைகளை பாதிக்கக்கூடும்.

**6. மரத்தின் வயது மற்றும் பராமரிப்பு**

வயதான அல்லது போதிய பராமரிப்பு இல்லாத மரங்களில் குரும்பை உதிர்வு அதிகமாகக் காணப்படும்.

**போரான் குறைபாட்டை எவ்வாறு உறுதி செய்வது?**

குரும்பை உதிர்வைக் கண்டவுடன் போரான் உரத்தை மட்டும் இடுவது சரியான நடைமுறை அல்ல.

**முதலில்**

- மண்பரிசோதனை செய்ய வேண்டும்.
- இலை ஊட்டச்சத்து பரிசோதனை மேற்கொள்ள வேண்டும்.
- நீர் வசதி மற்றும் உரமிடும் முறையை ஆய்வு செய்ய வேண்டும்.
- பூச்சி, நோய் தாக்குதல் உள்ளதா என்பதை கவனிக்க வேண்டும்.

இவற்றின் அடிப்படையில் மட்டுமே போரான் குறைபாடு இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

**தீர்வு என்ன?**

**போரான் குறைபாடு உறுதி செய்யப்பட்டால்**

● பரிந்துரைக்கப்பட்ட அளவில் போராக்ஸ் (Borax) அல்லது சோலுபோர் (Solubor) போன்ற போரான் உரங்களை பயன் படுத்தலாம்.

● மண்பரிசோதனை அடிப்படையில் மட்டுமே அளவை நிர்ணயிக்க வேண்டும்.

● அதிகமாக போரான் பயன்படுத்தக்கூடாது. ஏனெனில் போரான் அதிகமானாலும் நச்சுத்தன்மை ஏற்படும்.

**மேலும்,**

● மரத்திற்கு சீரான நீர்ப்பாசனம் வழங்க வேண்டும்.

● ஆண்டுதோறும் பரிந்துரைக்கப்பட்ட அளவில் ஹிணைலு மற்றும் தொழுஉரம் இடவேண்டும்.

● தேங்காய் ஓலை, மட்டை, தென்னை நார் போன்றவற்றால் மரத்தைச் சுற்றி மூடாக்கு (Mulching) அமைக்க வேண்டும்.

● நுண்ணூட்டக் கலவைகளை வேளாண் துறை பரிந்துரைப்படி பயன்படுத்த வேண்டும்.

● பூச்சி மற்றும் நோய்களை ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்த வேண்டும்.

தகவல் : ***குளோரி.கே.எஸ் மற்றும் சி.பிரசாத், உதவி பேராசிரியர்கள் (மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை), கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, உசிலம்பட்டி.***




மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

# வானிலை மற்றும் காலநிலை - வேறுபாடுகள் தெரியுமா?

வானிலையை நாம் ஆங்கிலத்தில் ( WEATHER ) என்றும் காலநிலையை (CLIMATE) என்றும் அழைக்கிறோம். நம்மில் சிலர் இதற்கான வேறுபாடுகளை தெரியாமல், இன்றைய காலநிலை மிகவும் நன்றாக உள்ளது என்று கூறுவதை கேள்விப்பட்டிருக்கிறோம்.



ஆனால் அக்கூற்று தவறானது. அதற்கு பதிலாக இன்றைய வானிலை நன்றாக உள்ளது என கூறவேண்டும். இது குறித்து இந்த பதிவில் பார்ப்போம்.

**1) வானிலை (WEATHER)**

வானிலை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தின் வளிமண் டலத்தில் நிலவும் சூரிய ஒளி, வெப்பம், மேகமூட்டம், காற்றின் திசை, காற்றழுத்தம், ஈரப்பதம், மழைப்பொழிவு மற்றும் பிற கூறுகளின் தன்மைகளை குறிப்பாதாகும்.

வானிலை குறுகிய காலமான ஒரு நாளோ, ஒரு வாரமோ அல்லது ஒரு மாதமோ, நடக்க கூடிய நிகழ்வை குறிப்பதாகும். மேலும் இது நேரத்திற்கு நேரம், காலத்திற்கு காலம் ஒரு வருடத்திற்குள்ளாகவே மாறக்கூடியது. காலையில் வானிலை தெளிவான வானத்துடன் வெப்பமாகவும், மாலை நேரத்தில் மேகமூட்டத்துடன் கூடிய மழையாகவும் மாறலாம். இதே போல வானிலை குளிர் காலத்தில் குளிராகவும் கோடைகாலத்திலே வெப்பமாகவும் இருக்கும். தொலைக்காட்சிகளில் கூட செய்தி வாசிப்பாளர்கள், இன்றைய வானிலை அறிக்கை என்று தான் கூறுவார்கள். காலநிலை அறிக்கை என்று செல்வதில்லை.

**2) காலநிலை (CLIMATE)**

இந்த சொல் காலமான என்ற பண்டைய கிரோக் மொழியில் இருந்து பெறபட்டதாகும். கிளைமோ என்றால் தமிழில் சாய்வு கோணம் (INCLINATION) என்று அர்த்தம். காலநிலை என்பது ஒரு பகுதியின் நீண்ட நாளைய வானிலை சாரசரியைக் குறிப்பதாகும்.

இது வளிமண்டலத்தின் வானிலை கூறுகளின் சாரசரி தன்மையினை நீண்ட காலத்திற்கு அதாவது 30 மற்றும் அதிகபடியான வருடங்களுக்கு கணக்கிட்டுக் கூறுவதாகும்.

காலநிலையின் கூறுகளும் வானிலையின் கூறுகளும் ஒன்றே ஆகும். வானிலை போன்ற காலநிலை அடிக்கடி மாறக் கூடியது அல்ல.

இப்போது பலருக்கும் நன்றாக புரிந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

# மக்காச்சோள பயிரில் வறட்சியை சமாளிக்கும் தொழில்நுட்பங்கள்

சேலம், ஜூலை 23

மக்காச்சோள பயிரில் வறட்சியை சமாளிக்கும் தொழில்நுட்பங்கள் பற்றி சேலம் மாவட்டம், கெங்கவல்லி வேளாண்மை உதவி இயக்குனர் மோகனசரிதா வெளியிட்டு உள்ள செய்தி குறிப்பில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.



கெங்கவல்லி வட்டாரத்தில் மக்காச்சோளம் (Maize) முக்கியமான தானியப் பயிராகும். இங்கு சுமார் 14000 ஹெக்டேர் அளவில் விவசாயிகளால் பயிரிடப்படுகிறது.

இப்பயிரில் வறட்சி காரணமாக முளைப்பு, வளர்ச்சி, மகசூல் ஆகியவை கடுமையாக பாதிக்கப்படுகின்றன.

எனவே, வறட்சியின் தாக்கத்தை குறைக்க பல்வேறு தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவது அவசியம் ஆகும்.

**வறட்சியை சமாளிக்கும் தொழில்நுட்பங்கள்**

**1. வறட்சியைத் தாங்கும் ரகங்களைத் தேர்வு செய்தல்**

● குறைந்த நீரிலும் வளரக்கூடிய ரகங்களைப் பயிரிட வேண்டும்.

● அங்கீகரிக்கப்பட்ட தரமான விதைகளை பயன்படுத்த வேண்டும்.

**2. சரியான விதைப்பு காலம்**

● பருவமழை தொடங்கும் நேரத்தில் விதைப்பு செய்ய வேண்டும்.

● தாமதமான விதைப்பைத் தவிர்க்க வேண்டும்.

### 3. நில ஈரப்பத பாதுகாப்பு

● வயலில் களைகளை கட்டுப்படுத்த வேண்டும்.
● பயிர் எச்சங்கள், வைக்கோல் போன்றவற்றை மூடாக்காக (Mulching) பயன்படுத்தி ஈரப்பதத்தைப் பாதுகாக்க வேண்டும்.

### 4. நீர் மேலாண்மை

● சொட்டு நீர்ப்பாசனம் அல்லது தெளிப்பு நீர்ப்பாசனத்தைப் பயன்படுத்த வேண்டும்.
● முக்கிய வளர்ச்சி நிலைகளில் (பூக்கும் மற்றும் கதிர் உருவாகும் காலம்) நீர் வழங்க வேண்டும்.

### 5. சத்து மேலாண்மை

● மண் பரிசோதனையின் அடிப்படையில் உரமிட வேண்டும்.
● உயிர் உரங்கள் மற்றும் தொழு உரங்களைப் பயன்படுத்தி மண்ணின் ஈரப்பதத் திறனை அதிகரிக்க வேண்டும்.
● பொட்டாசியம் உரத்தை பரிந்துரைப்படி இடுவது வறட்சியைத் தாங்கும் திறனை மேம்படுத்தும்.

### 6. களை மேலாண்மை

● களைகள் நீர் மற்றும் ஊட்டச்சத்துக்குப் போட்டியிடுவதால், அவற்றை ஆரம்ப நிலையிலேயே அகற்ற வேண்டும்.


### 7. மழைநீர் சேமிப்பு

● பண்ணைக் குட்டைகள் அமைத்து மழைநீரை சேமிக்க வேண்டும்.
● வரப்பு அமைத்தல் மற்றும் நீர் சேகரிப்பு முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

### 8. பயிர் பாதுகாப்பு

● வறட்சி காலங்களில் பூச்சி மற்றும் நோய் தாக்குதலை தொடர்ந்து கண்காணித்து உரிய கட்டுப்பட்டு நடவடிக்களை மேற்கொள்ள வேண்டும்.

வறட்சியை தாங்கும் ரகங்கள், சரியான விதைப்பு, மண் மற்றும் நீர் மேலாண்மை, மூடாக்கு, சீரான உரமிடல் மற்றும் மழை நீர் சேகரிப்பு போன்ற தொழில் நுட்பங்களை ஒருங் கிணைத்து பின்பற்றுவதன் மூலம் மக்காசோளத்தில் வறட்சி யால் ஏற்படும் மகசூல் இழப்பை குறைத்து நிலையான மற்றும் அதிக மகசூல் பெறலாம் என கெங்கவல்லி வேளாண்மை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# வேளாண்மை கல்லூரி மாணவர்கள் கொத்தமல்லி வயலில் களை மேலாண்மை விழிப்புணர்வு மற்றும் உழவர் சேவையில் ஈடுபாடு



தேனி, ஜூலை 23

கலசலிங்கம் நிகர்நிலைப் பல்கலைக் கழகம், கிருஷ்ணன் கோவில், ஸ்ரீவில்லி புத்தூர் வேளாண்மை மாணவர்கள், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டம் (RAWE) சார்பில், 22.07.26 அன்று காலை 10.00 மணிக்கு தேனி மாவட்டம், கம்பம் வட்டாரத் திலுள்ள கூடலூர் கிராமத்தில் கொத்தமல்லி வயலில் களை மேலாண்மை குறித்த களப்பணியை மேற்கொண்டனர்.

இந்நிகழ்வில் மாணவர்கள் லோகேஸ்வரன், முகம்மது ஷிபான், சந்தோஷ் குமார், செல்வகுமார் மற்றும் எழிலரசன் ஆகியோர் விவசாயிகளுடன் இணைந்து கொத்தமல்லி வயலில் களைகளை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். மேலும், களைகள் பயிருடன் நீர், ஊட்டச்சத்து, சூரியஒளி மற்றும் இடத்திற்காக போட்டியிட்டு மகசூல் மற்றும் தரத்தை குறைப்பதை விளக்கினர்.

களப்பயிற்சியின் போது, கொத்தமல்லி வயல்களில் பொதுவாக காணப்படும் முக்கிய களைகளான கோரைக்கிழங்கு (Cyperus rotundus), அருகம்புல் (Cynodon dactylon), காக்கைக்கால் புல் (Dactyloctenium aegyptium), சாமைப்புல் (Echinochloa colona), முள்ளுக்கீரை (Amaranthus viridis), பார்த்தீனியம் (Parthenium hysterophorus), சாரணை (Trianthema portulacastrum) மற்றும் பத்துவா கீரை (Chenopodium album) போன்ற களைகள் குறித்து விவசாயி களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இக்களைகள் பயிரின் வளர்ச்சியை பாதிப்பதோடு, பூச்சி மற்றும் நோய்களின் மாற்றுப் புரவலர் களாகவும் செயல்படக்கூடும் என மாணவர்கள் விளக்கினர்.

மேலும், குர்பி (Hand Hoe) போன்ற கைக்கருவிகளைப் பயன் படுத்தி சரியான முறையில் களை எடுக்கும் முறையை மாணவர்கள் செயல்முறை விளக்கத்துடன் எடுத்துக்காட்டினர். விதைத்த முதல் 30-45 நாட்கள் கொத்தமல்லி பயிரில் களைகளை கட்டுப்படுத்த மிகவும் முக்கியமான காலம் என்பதையும், இந்த காலத்தில் வயலை களையின்றி பராமரிப்பதன் மூலம் அதிக மகசூல் பெற முடியும் என்பதையும் வலியுறுத்தினர்.

அதோடு, காலமுறை இடைஉழவு, வயல் சுத்தம் மற்றும் ஒருங்கிணைந்த களை மேலாண்மை முறைகள் பற்றியும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்த களப்பணி மாணவர்களுக்கு வகுப்பறையில் கற்ற வேளாண் அறிவை நேரடியாக விவசாய நிலத்தில் நடைமுறைப் படுத்தும் சிறந்த வாய்ப்பாக அமைந்தது. மாணவர்களின் சேவையை விவசாயிகள் பாராட்டியதுடன், மேம்பட்ட பயிர் மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து ஆர்வமுடன் கலந்துரையாடினர்.

இந்நிகழ்ச்சி வெற்றிகரமாக நிறைவடைந்து, கலசலிங்கம் நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் கிராமப்புற மேம்பாடு, நிலையான வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலனுக்கான அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுவதாக அமைந்தது.

# பத்மஸ்ரீ விருது பெற்ற கால்நடை மருத்துவர் முனைவர் ந.புண்ணியமூர்த்திக்கு பாராட்டு விழா

நாமக்கல், ஜூலை 23

கால்நடை மருந்தியல் நிபுணரும் ஓய்வுபெற்ற பேராசிரியருமான முனைவர் புண்ணியமூர்த்தி நடேசனுக்கு 2026-ஆம் ஆண்டில் மதிப்புமிக்க 'பத்மஸ்ரீ' விருது வழங்கப்பட்டது. இந்தியா முழுவதும் உள்ள விவசாயிகளுக்குக் குறைந்த செலவில், நிலையான மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பு (antibiotic) இல்லாத அறிவியல் பூர்வமான பாரம்பரிய கால்நடை மருத்துவத்தில் (Ethno-Veterinary Medicine) ஆற்றிய முன்னோடிப் பணிக்காக இவர் அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

அவரை கௌரவிப்பதற்காக நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும், ஹரிக்கேன் வெட்ஸ் சாரிட்டபிள் டிரஸ்டும் இணைந்து, 17.07.26 அன்று பாராட்டு விழா நடத்தப்பட்டது.

விழாவில் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர் ம.செல்வராஜு, முன்னிலை வகித்து சிறப்பு விருந்தினரை கௌரவித்தார். மேலும் ஹரிக்கேன் வெட்ஸ் சாரிட்டபிள் டிரஸ்ட்டின் செயலாளர் விஜில் அன்பையா, அறக்கட்டளையின் பிற உறுப்பினர்களும் சிறப்பு விருந்தினரை கௌரவித்தனர். முனைவர் ந.புண்ணியமூர்த்தி, தனது நன்றிகளை தெரிவித்துக் கொண்டு மரபுசாரா கால்நடை மருத்துவத்தின் முக்கியத்துவம் குறித்து மாணவர்களுக்கு விரிவுரையாற்றி கலந்துரையாடினர்.

# வம்பன் 12 : உளுந்து சாகுபடியில் புதிய சாதனைக்கு வழிகாட்டி

உளுந்து சாகுபடி செய்யும் விவசாயிகள் ஒருங்கிணைந்த அதிக புதிய இரகங்கள் மற்றும் பயிர் மேலாண்மை தொழில் நுட்பங்களை கடைபிடிப்பதன் மூலம் அதிக மகசூல் பெறலாம். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2025ஆம் ஆண்டு வம்பன் 12 என்ற இரகத்தை வெளியிட்டுள்ளது.

வம்பன் 12 இரகம் தமிழ்நாட்டில் எல்லா பருவங்களிலும் பயிரிட ஏற்ற இரகமாகும். கேயு 2016 மற்றும் வம்பன் 3 என்ற இரு இனங்களை இன கலப்பு செய்து உருவாக்கப்பட்டது. இதன் வயது 75லிருந்து 80 நாட்கள், இது மஞ்சள்தேமல், இலை நெளிவு மற்றும் மற்றும் சாம்பல் நோய்களுக்கு எதிர்ப்பு சக்தி கொண்டது. வெள்ளை ஈ மற்றும் காய்த் துளைப்பான் பூச்சிக்கு எதிர்ப்புத்திறன் கொண்டது. ஒரு ஏக்கர் சாகுபடி செய்ய 8 கிலோ விதைகள் போதுமானது. விதைப்பதற்கு முன் ஒரு ஏக்கருக்கு தேவையான விதைகளுடன் 80 மில்லி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விதை அமிர்தத்தை ஊற்றி நன்றாக கலக்க வேண்டும், பின்னர் விதை அமிர்த கரைசல் பூசிய விதைகளை 30 நிமிடம் நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும். இவ்வாறு விதை நேர்த்தி செய்வதால் விதைகள் விரைவாக முளைக்கும், வேர் வளர்ச்சி துரிதமாக இருப்பதால் செடிகள் வேகமாக வளரும். வேர் முடிச்சுகள் அதிகமாக காணப்படும். மேலும் வறட்சியை தாங்கி வளர்ந்து அதிக மகசூல் கிடைக்கும். நிலத்தின் ஈரப்பதத்தை பொறுத்து 7-10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். உளுந்து மகசூலை அதிகரிக்க ஒரு ஏக்கருக்கு 2 கிலோ த.வே.ப.க. பயறு அதிசயத்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தேவையான அளவு ஒட்டும் பசையுடன் சேர்த்து பூக்கும் பருவதில் தெளித்தால் பூக்கள் உதிர்வது குறையும், பயறு விளைச்சல் 20 சதம் வரை கூடும். வறட்சியைத் தாங்கும் தன்மை அதிகரிக்கும். மேற்கூறிய தொழில்நுட்பங்களை பின்பற்றி சாகுபடி செய்தால் உளுந்து வம்பன் 12 இரகம் ஒரு எக்டேருக்கு இறவையில் குறைந்தபட்சம் 860 கிலோவும், நெல் தரிசு - 850 கிலோவும் மகசூலாக கிடைக்கும்.

தகவல் : *முனைவர் மு.ராமசுப்ரமணியன், மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர், முனைவர் என்.ஆனந்தி, இணைப்பேராசிரியர், பயிர் இன பெருக்கம் மற்றும் மரபியல்துறை, வேளாண்மை அறிவியல் நிலையம், அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்.*

# விதை விற்பனை உரிமம் பெற்ற கடைகளில் மட்டுமே விதைகளை வாங்க வேண்டும்

## விதை ஆய்வு துணை இயக்குநர் அறிவிப்பு

விருதுநகர், ஜூலை 23

விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் காரீப் பருவத்தில் பயிரிடும் விவசாயிகள் விதை விற்பனை உரிமம் பெற்ற விற்பனையாளர்களிடம் மட்டுமே விதைகளை வாங்க



வேண்டும் என்று விதை ஆய்வு துணை இயக்குநர் செ.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

தற்போது விதைப்பு பருவத்தில் மக்காசோளம், பருத்தி பயிரிடும் விவசாயிகள் தங்களுக்கு தேவையான விதைகளை வாங்கும் பொழுது தமிழ்நாடு அரசால் விதை விற்பனை செய்ய உரிமம் வழங்கிய விற்பனை நிலையங்களில் மட்டுமே விதைகளை வாங்க வேண்டும். மேலும் விதைச்சட்டம் 1966-ல் குறிப்பிட்ட 14 காரணிகளும் அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்த பின்னரே வாங்க வேண்டும். அவ்வாறு விவசாயிகள் விதைகளை வாங்கும் போது விதைப்பையில் உள்ள விபர அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள பயிர், இரகம், காலாவதி நாள், குவியல் எண், அவரவர் பகுதிக்கு ஏற்றவையா என்பவற்றை பார்த்து வாங்கவேண்டும். மேலும், விதைகளை வாங்கும் போது விற்பனை பட்டியலில் (இரசீது) விதையின் இரகம், குவியல் எண், காலாவதி நாள் குறிப்பிடப்பட்டிருக்கிறதா என கண்காணித்து, இரசீது கேட்டு வாங்க வேண்டும்.

மேலும் விதை விற்பனையாளர்கள் உரிமம் பெறாமல் விதைகளை விற்பனை செய்தாலோ, விற்பனை பட்டியல் இல்லாமல் விற்பனை செய்தாலோ, போலி விதைகளை விற்பனை செய்தாலோ நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேல் விற்பனை செய்தாலோ சம்பந்தப்பட்ட விற்பனையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என விதை ஆய்வு துணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

மேலும் பழக்கன்று, தென்னை மற்றும் நாற்றுக்கள் விற்பனை செய்யும் நர்சரி உரிமையாளர்கள் தவறாமல் விதை விற்பனை உரிமம் பெற்றிருக்க வேண்டும். உரிமம் இல்லாமல் விதை விற்பனை மற்றும் நர்சரி வைத்திருப்பவர்களின் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என விருதுநகர் விதை ஆய்வு துணை இயக்குநர் செ.இராஜேந்திரன் அறிவுறுத்தியுள்ளார்.



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண் அறிவியலாளர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி

கோயம்புத்தூர், ஜூலை 23

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் வேளாண் இணைப் ரோசிரியர்களுக்கு, "திறன் மேம்பாட்டுப் பயிற்சி" 22.7.26 முதல் 24.7.26 வரை அளிக்கப்படுகிறது.



இப்பயிற்சியைத் துவக்கி வைத்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மற்றும் செயல் துணைவேந்தர் முனைவர் கா. சுப்ரமணியன், கல்விசார் மேன்மை என்பது கல்வி நிறுவனங்களின் தர மதிப்பீடுகள் அல்லது செயல்திறன் குறியீடுகளில் மட்டும் அளவிடப்படுவதில்லை. தொடர்ந்து கற்றல், பல்துறை ஒருங்கிணைப்பு மற்றும் வேளாண் சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்வதில் தான் கல்விசார் மேன்மை வெளிப்படுகிறது என்றும், அது சமூக முன்னேற்றத்திலும் முக்கியப் பங்காற்று கிறது என்றார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்குநர் (DABD) முனைவர் ஏ.சோம சுந்தரம் தனது சிறப்புரையில், 21-ம் நூற்றாண்டின் கல்வி மரபுவழி வகுப்பறைக் கற்பித்தல் மற்றும் தேர்வு மையக் கற்றலைத் தாண்டி இருக்க வேண்டும்.

மாணவர்களின் புத்தாக்கச் சிந்தனைகளை நிலையான தொழில் முயற்சிகளாக மாற்றுவதற்குத் தேவையான அறிவு, திறன், தன்னம்பிக்கை மற்றும் நடைமுறை அனுபவங்களை வழங்கி,தொழில்முனைவு மனப்பான்மையை வளர்ப்பதே கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டும் என்றும், அதற்கு பேராசிரியர்களுக்குத் தொடர்ந்து திறன் மேம்பாட்டு பயிற்சி அளிப்பது அவசியம் என்றார்.

வாழ்த்துரையாற்றிய திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்குநர் முனைவர் பி.ஜெயக்குமார், மாணவர்களை ஊக்கு விப்பதிலும், வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்பக் கற்பித்தலை ஒருங்கிணைப்பதிலும், ஆராய்ச்சி சார்ந்த கற்றலை ஊக்கு விப்பதிலும், புதுமை மற்றும் தொழில் முனைவை வளர்க்கும் கல்விச்சூழலை உருவாக்குவதிலும் ஆசிரியர்களின் பங்கு மிக முக்கியமானது என்றார். இதனைக் கருத்தில் கொண்டு, நவீன கற்பித்தல் அணுகுமுறைகள், மேம்பட்ட ஆராய்ச்சித் திறன்கள், டிஜிட்டல் கற்பித்தல், இணையப் பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் அறிவியல் தகவல் தொடர்புத் திறன்களை பேராசிரியர் களுக்கு வழங்கும் வகையில் இப்பயிற்சித் திட்டம் வடிவமைக் கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

உயர்தர ஆராய்ச்சி முன்மொழிவுகளை உருவாக்குதல், இந்தியக் கல்வி அமைப்பைப் புரிந்து கொள்ளுதல், கல்விசார் மேன்மைக்கான தர உறுதிப்பாடு, இணையப் பாதுகாப்பு மற்றும் தரவு தனியுரிமை, Q1 தர அறிவியல் ஆய்விதழ்களில் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடுவதற்கான உத்திகள், செயற்கை நுண்ணறிவு சார்ந்த கற்பித்தல் முறைகள், கல்விசார் செயலிகள், விளையாட்டு அடிப்படையிலான கற்றல் மற்றும் வேளாண் விரிவாக்கத்தில் நுண்ணறிவு தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில், உள் தர அங்கீகாரப்பிரிவு (IQAC) ஒருங்கிணைப்பாளர் மற்றும் வனவியல் துறை பேராசிரியர் முனைவர் சு.உமேஷ் கண்ணா வரவேற்புரையாற்றினார். பேராசிரியர் (ARM) முனைவர் த.சாம்சாய் நன்றியுரையாற்றினார்.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# சம்பங்கியின் தாய் குமிழ்களில் இருந்து அதிக நடவு கன்றுகளை உருவாக்குதல் பற்றிய வெளிவளாக பயிற்சி




கடலூர், ஜூலை 23

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலம், சார்பாக 22.07.26 அன்று மேல்புவனகிரி வட்டாரம், ஊ.முட்லூர் கிராமத்தில், சம்பங்கியின் தாய் குமிழ்களில் இருந்து அதிக நடவு கன்றுகளை உருவாக்குதல் பற்றிய வெளிவாளக பயிற்சி நடைப்பெற்றது.

வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், இப்பயிற்சியை துவக்கி வைத்து, கே.வி.கே-வின் முக்கிய செயல்பாடுகள் பற்றி விளக்கினார். மேலும், முனைவர் சிவசங்கர் (தோட்டக்கலைத் துறை), மண் மற்றும் தட்பவெப்பநிலை, நிலம் தயாரித்தல், நடவு முறை, நீர் நிர்வாகம், உரமிடுதல் பற்றியும், சம்பங்கி மலர் இனப்பெருக்க முறைகள், சம்பங்கி சாகுபடியில் (புரோ-ட்ரே) குழி தட்டு நாற்றாங்கால் தொழில்நுட்பத்தின் நன்மைகள், சிறிய கிழங்குகளைப் பரித்தெடுத்தல் மற்றும் சம்பங்கி கிழங்குளைப் பிரித்தல் குறித்தும் விளக்கினார்.

மேலும் தரமான நாற்றுகளைப் பெறுவதற்கு, சிறிய கிழங்குகள் மற்றும் பிரிக்கப்பட்ட கிழங்குகளுக்குப் பூஞ்சைக் கொல்லி சிகிச்சை அளிப்பதும் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். மேலும், இயற்கை முறையில் சம்பங்கி சாகுபடி செய்து இரட்டிப்பு லாபம் பெறுவது குறித்தும் தெளிவாக கூறினார்.

மேலும் கடலூர் மாவட்டம், மேல்புவனகிரி வட்டாரம், ஊ.முட்லூர், கிராமத்தை சேர்ந்த 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன்பெற்றனர்.

# நிலக்கடலை பயிரில் கூடுதல் மகசூல் பெற வேளாண்மை உதவி இயக்குநர் யோசனை

புதுக்கோட்டை, ஜூலை 23

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை வட்டாரத்தில் நடப்பு காரீப் பருவத்தில் நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கூடுதல் மகசூல் பெற பூக்கும் பருவத்தில் பூக்கள் உதிர்வபதை தடுத்து பூக்கள் மிகுதியாக பூக்கச் செய்து அறுவடையின் போது திரட்சியான நிலக்கடலைகளை பெற்று கூடுதல் மகசூல் பெறுவதற்கு இலைவழியே ஊட்டச்சத்து கரைசல் தெளிப்பது முக்கியமான தொழில்நுட்பமாகும் என வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**ஊட்டச்சத்து கரைசல் தயார் செய்தல்**

ஒரு ஏக்கர் பரப்பு நிலக்கடலைக்கு தேவையான ஒரு கிலோகிராம் டிஏபி 400 கிராம்,அம்மோனியம் சல்பேட் 200 கிராம் போராக்ஸ் ஆகியவற்றை தெளிப்பதற்கு முதல் நாள் இரவே 15 லிட்டர் தண்ணீரில் ஊற வைத்து மறுநாள் காலை கரைசலை வடிகட்டி கிடைக்கும் தெளிந்த கரைசலுடன் தேவையான நீர் சேர்த்து 200 லிட்டர் கரைசலாக தயார் செய்திட வேண்டும். இந்த கரைசலை விதைத்த 25ம் நாள் ஒரு முறையும் 35ம் நாள் மறுமுறையும் தெளிக்க வேண்டும். கரைசலுடன் பிளானோபிக்ஸ் எனும் பயிர் வளர்ச்சி ஊக்கியை 140 மில்லி கலந்து தெளிக்கவும். ஊட்டச்சத்து கரைசல் தெளிக்கும் போது பரிந்துரைக்கப்பட்ட உரங்களின் அளவு சரியாகவும் வயலில் ஈரப்பதம் இருக்குமாறும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மேலும் நிலக்கடலை பயிர் விதைத்த 45ம் நாளில் இரண்டாம் களை எடுத்து மண் அணைக்க வேண்டும். மண் அணைப் பதற்கு முன் ஏக்கருக்கு 80 கிலோகிராம் ஜிப்சம் இட்டு களைகள் நீக்கி செடிகளை சுற்றி மண் அணைக்க வேண்டும். இதனால் நிலக்கடலை பயிரின் விழுது மண்ணுக்குள் இறங்கி அறுவடையின் போது திரட்சியான மற்றும் எண்ணெய்சத்து மிகுந்த நிலக்கடலை கிடைக்கும் என கந்தர்வகோட்டை, வேளாண்மை உதவி இயக்குநர் (பொ), இரா.விக்னேஷ் தெரிவித்துள்ளார்.

# கோடை முடிந்தும் சுட்டெரிக்கும் வெயிலிலிருந்து பயிர்களை பாதுகாப்பது எவ்வாறு?

சேலம், ஜூலை 23

சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டினம் வட்டாரம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வெப்ப அலைகளில் இருந்து பயிர்களை பாதுகாத்து பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படாமல், கூடுதல் மகசூல் பெறுவதற்கு, வெப்பத்தை தாங்கும் பயிர் மேலாண்மை உத்திகள்




குறித்து வேளாண்மை உதவி இயக்குனர் ப.சண்முகப்பிரியா விவசாயிகளுக்கு சில முக்கிய வழிகாட்டுதல்களை வெளியிட்டு உள்ளார்.



**மண்ணை குளிர வைக்கும் மூடாக்கு :** தற்போது நிலவி வரும் பருவநிலை மாற்றத்தால் இயல்பை விட வெப்பத்தின் அளவு அதிகமாக உள்ளது. பயிர்களின் வளர்ச்சிக்கு குறிப்பிட்ட வெப்பநிலை மட்டுமே தேவை. வெப்பம் அதிகரிக்கும்போது பயிர்கள் வாடி, தானிய உற்பத்தி பெருமளவில் பாதிக்கப்படும். அதனை தடுக்க விளைநிலங்களில் காய்ந்த இலைகள், சருகுகள் அல்லது வைக்கோல்களை கொண்டு மூடாக்கு போட வேண்டும். இது மண்ணின் வெப்பநிலையை கட்டுக்குள் வைப்பதுடன் நீர் ஆவியாவதை தடுத்து, ஈரப்பதத்தை அப்படியே தக்கவைக்கும்.

**உப்பு நீர் ஆபத்து :** கோடை காலத்தில் நிலத்தடி நீர்மட்டம் வேகமாக குறைவதால் தண்ணீரில் உப்புத்தன்மை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இதனை சமாளிக்க பயிர்களுக்கு குறைந்த இடைவெளியில் அடிக்கடி நீர் பாய்ச்சுவது அவசியம். மண்ணில் எப்போதும் ஈரப்பதம் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

**அதிகாலையில் விதைப்பு :** கடுமையான வெயிலில் பயிர்கள் கருகாமல் இருக்க விதைப்பு மற்றும் நடவு பணிகளை மதிய வேளையில் தவிர்த்து, காலை அல்லது மாலை வேளைகளில் மட்டுமே மேற்கொள்ள வேண்டும்.

**பூசா ஹைட்ரோஜெல் பயன்பாடு :** பயிர்களுக்கு வறட்சியை தாங்கும் சக்தியை அதிகரிக்க இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் தயாரித்துள்ள பூசா ஹைட்ரரோஜெல் மாத்திரைகளை ஏக்கருக்கு 1 முதல் 2.5 கிலோ வரை பயன்படுத்தலாம். இது மண்ணில் உள்ள தண்ணீரை உறிஞ்சி வைத்துக் கொண்டு வறட்சியான நேரத்தில் செடிகளுக்கு பங்கிட்டு அளிக்கும்.

மேலும் பயிர்களை குளிர்விக்க, மெத்திலோடி ராஃபிக் திரவத்தை ஏக்கருக்கு 200 மி.லி தெளிக்கலாம். இலையின் ஓரங்கள் கருகாமல் தடுக்க தகுந்த நுண்ணூட்ட சத்துக்களை வழங்க வேண்டும்.

சொட்டு நீர் பாசனம் அல்லது தெளிப்பு நீர் பாசனம் போன்ற நவீன முறைகளை பயன்படுத்தி தண்ணீரை சேமிக்கலாம். தற்போதைய சூழலில் வானிலை முன்னறிவிப்புகளை கவனித்து அதற்கு ஏற்ப விதைப்பு காலத்தை மாற்றி அமைக்க வேண்டும். இதன் மூலம் எதிர்பாராத வறட்சி அல்லது திடீர் மழையிலிருந்து பயிர்களை காக்க முடியும். மேலும் உரிய கால கெடுவிற்குள் அறிவிப்பு செய்யப்பட்ட பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்ய வேண்டும். வேளாண் துறையின் இந்த எளிய ஆலோசனைகளை பின்பற்றி, பயிர் இழப்பை தவிர்த்து கோடையிலும் நிலையான லாபமும், கூடுதல் மகசூலும் பெற்று பயனடையும்படி அயோத்தியா பட்டிணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் விவசாயிகளை கேட்டுக் கொண்டுள்ளார்.

# நெல் பயிர்களை பாதுகாக்க வேளாண்மை உதவி இயக்குனர் அறிவுறுத்தல்

திருவள்ளூர், ஜுலை 23

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் வட்டாரத்தில் நடப்பு குருவை சாகுபடி பருவத்தில் நெல் பயிர்களை நோய் மற்றும் பூச்சி தாக்குதலில் இருந்து கட்டுப்படுத்த எல்லாபுரம் வேளாண்மை உதவி இயக்குனர் அ.உமாமகேஸ்வரி குறிப்பிட்டுள்ள அறிக்கையில், நெல்லில் தற்போது இலை நுண்சிலந்தி தாக்குதல் அதிகரித்து வருகிறது. இது காற்றின் மூலம் பரவக்கூடியது. எனவே விவசாயிகள் பின்வரும் விசயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**நெல் இலை நுண்சிலந்தி (Leaf Mite) - அறிகுறிகள் மற்றும் ஒருங்கிணைந்த மேலாண்மை அறிகுறிகள்:**

- இலை நுண் சிலந்திகள் இலைகளின் அடிப்பகுதியில் இருந்து சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும்.
- ஆரம்பத்தில் இலைகளில் சிறிய மஞ்சள் அல்லது வெண்மையான புள்ளிகள் தோன்றும்.
- இலை நுனி மஞ்சளாகி, பின்னர் பழுப்பு அல்லது வெண்கல (Bronzing) நிறமாக மாறும்.
- இலைகள் சுருண்டு, காய்ந்தது போன்ற தோற்றம் காணப்படும்.
- கடுமையான தாக்குதலில் செடியின் வளர்ச்சி குறைந்து, மணிகள் நிரம்பாமல் மகசூல் குறையும்.
- பூக்கும் பருவத்தில் தாக்குதல் ஏற்பட்டால், நெல்மணிகளில் நிறமாற்றம் காணப்படும்.

● வெப்பமான, வறண்ட காலநிலையில் தாக்குதல் அதிகமாக இருக்கும்.

**ஒருங்கிணைந்த மேலாண்மை**

● வயலில் போதிய நீர் பராமரிக்கவும்; நீர் பற்றாக்குறையைத் தவிர்க்கவும்.
● அதிக நைட்ரஜன் உரமிடுவதைத் தவிர்த்து, சமச்சீர் உரமிடல் (குறிப்பாக பொட்டாசியம்) மேற்கொள்ளவும்.
● மாற்று தாங்கு தாவரங்களாக இருக்கும் களைகளை அகற்றவும்.
● தேவையற்ற பரவலான பூச்சிக்கொல்லிகளைத் தவிர்த்து, இயற்கை எதிரிகளைப் பாதுகாக்கவும்.

**தாக்குதல் அதிகமாக இருந்தால் :**

● ஈரக்கந்தகம் (Wettable Sulphur 80 WP) – 2 கிராம்/லிட்டர், அல்லது
● புரோபார்கைட் 57 சிஎீ – 2 மி.லி./லிட்டர், அல்லது
● பெனசாக்வின் 10 சிஎீ – 1 மி.லி./லிட்டர் தெளிக்கலாம்.

மருந்தை இலைகளின் அடிப்பகுதியிலும் நன்கு படுமாறு தெளிக்க வேண்டும்.

**இயற்கை வேளாண்மையில்**

வேப்பெண்ணெய் 3% (30 மி.லி./லிட்டர் + 5 மி.லி. திரவ சோப்பு) அல்லது 5% வேப்பங்கொட்டை கரைசல் (NSKE) 7–10 நாட்கள் இடைவெளியில் தெளிக்கலாம்.

மேலும் சில இடங்களில் இலை நுண்சிலந்தி தாக்குதலோடு சேர்த்து, நெல்லில் பாக்டீரியல் இலை கருகல் நோய், இலை சுருட்டுப் புழு தாக்குதலும் ஆங்காங்கே தென்படுகிறது, நுண் சிலந்தி தாக்குதலால் இந்த நோயின் தீவிரமும் அதிகரித்துள்ளது.

எனவே விவசாயிகள், புரப்போர்கைட் 57% EC @ 300 மிலி + பேக்டரிமைசின் @ 100 கிராம் + கார்டாப் ஹைட்ரோ குளோரைடு 50% SP @ 400 கிராம், 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கொடுக்க வேண்டும் என வேளாண்மை உதவி இயக்குநர் எல்லாபுரம் தெரிவித்துள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**